**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE, (FTC) ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**STC.No. 13/2023 D.W. 2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. பிரான்சிஸ் லயோலா பெர்னான்டோ** | **Caste** | : | |
| **Father's Name** | : | த/பெ. தன்ராஜ் பெர்னான்டோ | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 13.12.2024**

**மேற்படி சாட்சியானவர் இந்நீதிமன்றத்தில் குற்றம் சுமத்தப்பட்ட நபரான ஆண்டனி மேரி என்பவர் கடந்த 06.09.2024 அன்று அவர் தரப்பில் முதல் விசாரணை செய்யப்பட்ட போது அவர் தரப்பில் வழக்கு சம்மந்தமாக தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களை மேற்படி குற்றம் சுமத்தப்பட்ட நபர் மூலம் குறியீடு செய்ய கற்றறிந்த புகார்தாரர் தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபணை தெரிவித்ததன் அடிப்படையில் மேற்படி ஆவணங்கள் தொடர்பான அலுவலகத்துக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு அதன் அடிப்படையில் இன்று மேற்படி சாட்சி மேற்படி அலுவலகம் சார்பாக சாட்சியம் முன் வைக்கிறார்.**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு முதல் விசாரணை**

நான் சென்னை சத்தியபாமா நிகர் நிலை பல்கலைகழக்கத்தில் துணை வேந்தர் அலுவலகத்தில் அலுவலக பணியாளராக பணிபுரிந்து வருகிறேன்.

| **வரிசை எண்** | **விவரம்** | **குறியீடு செய்யப்பட்ட விவரம்** | **ஆட்சேபணை** |
|---|---|---|---|
| 7. | இந்நீதிமன்றத்தில் இன்று சாட்சியம் அளிக்க எனக்கு எனது அலுவலகம் கொடுத்த அங்கீகார கடிதம் | Ex.D.7. | இல்லை |
| 8. | 01.07.2008ம் தேதியிட்ட குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு எங்கள் அலுவலகம் வழங்கிய பணி நியமன உத்தரவு | Ex.D.8 | இல்லை |

| | | | |
|---|---|---|---|
| 9. | மேற்படி குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு எங்கள் அலுவலகத்தால் வழங்கப்பட்ட அடையாள அட்டை நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது | Ex.D.9 | இல்லை |
| 10. | 07.05.2017ம் தேதி தேர்வு நடத்தியதற்கான ஆவணம் | Ex.D.10 | இல்லை |
| 11. | 07.05.2017 அன்று குற்றம் சுமத்தப்பட்ட நபர் தேர்வு பணியில் இருந்ததற்காக அவருக்கு ஊதியம் வழங்கியதற்கான சான்று 3 எண்ணிக்கை | Ex.D.11 | கற்றறிந்த புகார்தாரர் தரப்பு வழக்கறிஞர் மேற்படி ஆவணத்தில் தேர்வு நடத்திய சதீஸ் தவான் Space Center–ன் முத்திரை இல் லை என்று ஆட்சேபணை தெரிவிக்கிறார். ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது. |
| 12. | 2018 மே மாதத்திற்கான வருகை பதிவேட்டின் நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது | Ex.D.12 | இல்லை |
| 13. | 2016 ஜனவரி முதல் 2018 டிசம்பர் வரை குற்றம் சுமத்தப்பட்ட நபர் எங்கள் பல்கலைகழகத்தில் பணிபுரிந்து அதற்காக வாங்கிய சம்பளப்பட்டியல் எண்ணிக்கை 36 | Ex.D.13 | இல்லை |

<u>குறுக்கு விசாரணை</u>

1. மேற்படி பல்கலைகழகத்தில் தற்சமய நிர்வாகியாகிய இறந்து போன JPRன் வாரிசு உள்ளார் என்றால் சரிதான். மேற்படி JPRக்கு சொந்த ஊர் முட்டம் என்றால் சரிதான். குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு முட்டம் என்றால் சரிதான். இருவரும் ஒரே ஊர் என்பதால் ஆவணங்கள் வழக்குக்கு ஏற்றவாறு தயாரிக்க வாய்ப்பு உள்ளது என்றால் சரியல்ல.

2. Ex.D10 ஆவணத்தை பொறுத்து மேற்படி தேதியில் மேற்படி தேர்வு நடந்ததை உறுதி செய்ய இயலுமா என்றால் கண்டிப்பாக நடந்தது. நாங்கள் அன்றைய தினம் தேர்வு நடத்தவில்லை தேர்வினை மேற்பார்வை தான் செய்தோம் என்றால், இல்லை நாங்கள் தேர்வு நடத்திக் கொடுத்தோம்.

3. மேற்படி குற்றம் சுமத்தப்பட்ட நபரை மேற்படி பணிக்கு பணித்ததாக உத்தரவு

ஏதும் கொடுத்தோமா என்றால் இல்லை யாருக்குமே கொடுக்கவில்லை. நாங்கள் சுற்றிக்கை அனுப்புவோம். மேற்படி தேர்வு நடத்திய போது அதில் தலைமை பொறுப்பாக யார் இருந்தார் என்றால் எங்கள் துணை வேந்தர் தான் இருந்தார்.

4. எங்களுக்கு அன்றைய தினம் பேக் ஆபிஸ் வொர்க் தான் இருந்தது. நாங்கள் யார் யாரெல்லாம் மேற்பார்வை செய்ய போனார்களோ அவர்களுக்கு பட்டியல் தயார் செய்து அவர்களுக்கு சம்பளம் கொடுக்கும் வேலையை அலுவலகத்தில் இருந்து செய்தோம். அதனால் குற்றம் சுமத்தப்பட்ட நபர் தேர்வு நடத்தியதாக சொல்லமுடியாது என்று சொன்னால் சரிதான்.

5. தேர்வு நடத்தினால் தான் தேர்வு அறையில் இருக்க வேண்டிய சூழ்நிலை வரும் என்றால் சரிதான். அவர் அலுவலக அறையில் தான் இருந்தார். அவர் அலுவலகத்தில் இருக்கும் போது இல்லாமல் இருந்தால் கூட இருந்ததாக கணக்கு காட்ட முடியும் என்றால் சரியல்ல. வெளியில் செல்ல வாய்ப்பு உள்ளது என்றால் சரியல்ல.

6. தேர்வு முடிந்த பிறகு மீண்டும் பணியில் சேர்வதற்கு உத்தரவு எதுவும் கொடுத்தோமா என்றால் இல்லை. Project என்பது யாரோ ஒரு நபர் ஆய்வுக்காக ஒப்புதல் பெற்று அதனை செய்வதற்கு அவரின் தனிப்பட்ட விருப்பத்தில் நபர்களை நியமித்து அதில் அதற்கான தொகையை பெறுவதற்காக கணக்குகளை, பதிவுகளை உருவாக்கி மேற்படி பெற்ற தொகையை நாங்கள் நேர் செய்வோமா என்றால் இல்லை.

7. அவ்வாறு Project எடுக்கும் அறிவியல் அறிஞர்கள் நியமிக்கம் நபர்கள் Project Assistant ஆக வரமாட்டார்கள். அவர்கள் JRF (Junior Research Fellow) ஆக நியமிக்கப்படுவார்கள். அவர்கள் மூன்று ஆண்டுகள் வரை தற்காலிகமாக பணியமர்த்தப்படுவார்கள் Project Assistant என்பவர்கள் நிரந்தரமாக பணியமர்த்தப்படுவர்கள் ஆவார்கள். வாங்கும் Project–யை நிர்வகிக்கும் அலுவலகத்தில் இருப்பார்கள்.

8. நிரந்தர பணியாளர் என்றால் PPF பிடித்தோமா என்றால் அந்தக் காலக்கட்டத்தில் சம்பளம் குறைவாக உள்ளது என்று கேட்டு PPF பிடிக்க வேண்டாம் என்று கேட்டால் பிடிக்கமாட்டோம். மேற்படி வேண்டாம் என்று அலுவலகத்தில் கொடுத்திருப்பார்கள் என்றால் கொடுத்திருப்பார்கள்.

9. UGC யில் கணக்கு காண்பிப்பதற்காக நாங்களாக உருவாக்கிக் கொண்ட

ஆவணத்தை இந்த வழக்கிற்கு ஏற்றவாறு ஜோடித்துக் கொண்டு வந்தோம் என்றால் இல்லை. மேற்படி நான் தாக்கல் செய்த ஆவணங்களை தருவதற்கு துணை வேந்தருக்கு அதிகாரம் இல்லை என்றால், அதிகாரம் இருக்கிறது.

10. குற்றம் சுமத்தப்பட்ட நபரும் எங்கள் கரஸ்பாண்டன்டும் ஒரே ஊர் என்பதால் அவருக்கு ஆதரவாக வழக்கின் தன்மைக்கு ஏற்றவாறு ஆவணங்களை தயார் செய்து தாக்கல் செய்ய வாய்ப்பு உள்ளது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த ஆவணங்கள் அனைத்தும் இவ்வழகக்கிற்காக தயார் செய்துள்ளது என்றாலும் இந்த வழக்கின் தன்மை கட்டுப்படுத்தாதது என்றாலும் சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம்,
இரணியல்.